[28th October 1957

SRI K. VINAYAKAM : Sir, whereas the position of City of Madras is peculiar when compared to other districts in the sense that the City does not produce even one grain for consumption, will the Government review the entire issue and allot the entire number of fair price shops that have been now closed, as this thesis has been accepted in the Collectors' Conference when we made representations in this regard?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Because Madras City does not produce rice, a larger number of shops are located in the City. I may inform the hon. Member that although the City does not produce rice, even in the days of acute shortage, rice was being smuggled from Chingleput district into the City of Madras.

SRI S. M. ANNAMALAI : மாநில சட்ட மன்றத் தலைவர் அவர்களே, ஆந்திர மாகாணத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு அரிசி வரும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் ஆந்திர மாநிலத்து வியாபாரிகள் தமிழ் நாட்டிலுள்ள கும்பகோணம் போன்ற இடங்களுக்கு வந்து அரிசி வாங்கி வெளியே அனுப்பிக்கொண்டிருப்பதாக பத்திரிகை வாயிலாக அறிந்தேன். இந்தச் செய்தி சென்னை மாநில அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நானும் பத்திரிகையில் பார்த்தேன், ஆந்திர வியாபாரிகள் தமிழ் நாட்டிற்கு வந்து வியாபாரம் செய்து வருதவாக, இவ்விதமாக சில வியாபாரிகள் நாட்டிலுள்ள உணவுப் பிரச்சினையை கருத்தில் கொள்ளாமல் "ஸ்பெகுலேட்" செய்து தொல்லைகளை கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் அரிசியை வாங்கி இந்த ஸோனுக்கு வெளியே அனுப்ப முடியாது.

SRI M. R. KANDASAMY MUDALIAR : சேலம் ஜில்லாவை பொறுத்த வரையில் அந்த ஜில்லா மிகவும் பிற்பட்ட நிலையில் இருந்து வருகிறது. அங்குள்ள தொழிலாளர்கள், விவசாயிகள், நெசவாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த ஜில்லாவில் உணவு விஷயத்தில் கூடுதல் நியாய விலைக்கடைகளை ஏற்படுத்துகிற அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: முதலிலே ஒவ்வொரு ஜில்லாவுக்கும் கடைகளை கொடுக்கும் போது அங்குள்ள எல்லா அவசியங்களைப் பார்த்துக்தான் கொடுக்கப்பட்டது. அப்பொழுது சேலத்திற்கு அதிகமாகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போதுதான் பாதியாக குறைக்கப் பட்டிருக்கிறது.

SRI T. P. ELUMALAI : சபாநாயகர் அவர்களே, கேரள சர்க்கார் ஆட்சியில் வந்திருப்பதாகவும் நல்ல சட்டங்களை எல்லாம் கொண்டு வந்திருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. ஆனால் அவர்கள் சாப்பாட்டுக்கு மாத்திரம் தமிழ் நாட்டை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது ஏன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கேரள சர்க்கார் நல்ல சட்டங்களை இயற்றுவதினால் அவர்கள் பட்டினியாக இருக்க வேண்டும் என்பது சரியல்ல. தமிழ் நாட்டு அரிசியை அவர்கள் சாப்பாட்டுக்காக எதிர்பார்க்கிறார்கள் என்பதைப் பார்த்து நாம் சந்தோஷப் படவேண்டும்.

Sathyagraha by beedi workers.

* 19 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there was satyagraha by the beedi workers in the Salem district in August 1957 against the wage cut imposed by the beedi company owners;

28th October 1957]

(*b*) whether the Deputy Labour Commissioner had tried to effect a settlement on 20th and 21st August; and

(c) if so, with what result?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) & (*c*). Yes, Sir. The Personal Assistant to the Commissioner of Labour held conciliation. He reported to Government that his efforts to settle the dispute amicably were not successful. The Government thereupon referred the dispute to the Labour Court, Coimbatore, for adjudication.

SRI N. K. PALANISAMI : அது மட்டுமல்ல, இன்னும் பல இடங்களில் இம்மாதிரியான தகராறுகள் நீடித்துக்கொண்டிருக்கின்றன. ஆகவே இத்தகராறுகளை திருப்தியாக முடித்து வைப்பதற்காக அவசரமாக ஏன் ஒரு சட்டம் கொண்டு வரக்கூடாது என்று கேட்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் நடந்த நமது சென்னை ராஜ்ய தொழிலாளர் ஆலோசனை போர்ட்டின் முன்னால் சர்க்கார் கொண்டு வரப்போகின்ற ஒரு சட்டம் நகல் சமர்பிக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்களும் அதை பார்த்திருப்பார்கள் என்று நம்புகிறேன். இந்தக் கோர்ட் இதைப் பரிசீலித்து சீக்கிரமாகவே ஒரு சட்டம் கொண்டு வருவதற்கு முன்வரும் என்று சொல்ல விரும்புகிறேன்.

Representation from the Coimbatore District Cotton Mill Workers' Association.

* 20[a] *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have received any resolution passed recently by the Coimbatore District Cotton Mill Workers' Association, Singanallur, regarding the decrease in the work load to 7 hours a day; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) Under the Factories Act, the hours of work and overtime are prescribed. Reduction in the hours of work is a matter for negotiation between the parties concerned.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, உலகத்தின் முன்னேற்ற மடைந்த நாடுகளில் எல்லாம் 40 மணி நேரம் வேலை என்று இருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அந்த நாடுகளோடு சென்னை நாட்டையும் சேர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : முன்னேற்றம் அடைந்த நாடுகளில் 40 மணி நேரம் வேலை இருப்பதும் 48 மணி நேரம் வேலை இருப்பதும் எனக்குத் தெரியும். இப்போது நாட்டின் உற்பத்திப் பெருக்கை உத்தேசித்து இப்போது வேலை நேரத்தைக் குறைப்பது நல்லது அல்ல என்று நினைக்கிறேன்.

SRI N. K. PALANISAMI : வேலை பளு சம்பந்தமாக, ஏற்கெனவே ஆர்பிட்ரேஷன் போர்ட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த போர்டு சரிவர வேலைசெய்வதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

---

a * Question 20-A taken along with * Question 12.